# பள்ளி விதிமுறைகள்

1. தமிழார்வமிக்க அனைத்து இன மாணவ மாணவியரும் இப்பள்ளியில் சேர்ந்து தமிழ் கற்றுச் சிறப்புற வாய்ப்பு அளிக்கப்படும்.
2. மாணவ மாணவியர் 5 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும்.
3. மாணவ மாணவியரின் தமிழ்ப் படிப்புத் திறனுக்கும், வயதுக்கும் ஏற்றவாறு உரிய வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
4. தொடக்க வகுப்பிலிருந்து மாணவ மாணவியருக்குத் தமிழைப் பேச, எழுத, படிக்கக் கற்றுகொடுக்கப்படும்.
5. தகுதி வாய்ந்த மாணவ மாணவியருக்கு கேம்பிரிட்சு பல்கலைக் கழகம்(Cambridge University) நடத்தும் G.C.E O' Level & A' Level தேர்வு எழுதிட பயிற்சி அளிக்கப்படும்.
6. தமிழ்ப்பள்ளியில் படிக்க வரும் மாணவ மாணவியரின் பெற்றோர்கள், ஆண்டு தோரும் நிர்வாக கட்டணம் (Administration Charges) வழங்கி பள்ளி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வேண்டும்.
7. ஆங்கிலப்பள்ளி வகுப்பறைகளில் தமிழ்ப் பள்ளி வகுப்புகள் நடைபெறுவதால், இந்நாட்டுப்பள்ளி விதி முறைப்படி ஒவ்வொரு தமிழ் மாணவ, மாணவியரும் ஒழுங்கு நடைமுறைக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
8. ஆங்கிலப்பளிகளின் விடுமுறைக் காலங்களில் தமிழ்ப் பள்ளிக்கும் விடுமுறை ஆகும்.
9. மாணவர்கள் தமிழ்ப்பள்ளிக்கு வரும்போது மறக்காமல் ID Card-ஐ அணிந்து வர வேண்டும்.

## தேர்வும் - பரிசும்

1. ஒவ்வொரு ஆண்டும் இறுதியில் மாணவ மாணவிகளுக்குத் தேர்வுகள் நடத்தி திறமையான மாணவ மாணவிகளுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.
2. பள்ளியின் நிர்வாகக் குழு ஆண்டுதோறும் நடத்தும் தமிழர் திருநாள் விழாவில் மாணவ மாணவிகளின் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்படும்.

## நடனம்

1. தமிழ்ப்பள்ளி நடைபெறுகின்ற சனிக்கிழமை தோறும், நடன வகுப்பும் நடைபெறும். நடனம் பயில ஆர்வமிக்க மாணவிகள் நடனப் பயிற்சியில் சேர்ந்து நடனம் கற்றுக் கொள்ளலாம். நடனப் பயிற்சிக்கு வரும் மாணவிகள் கிழமை தோறும் பயிற்சி ஆசிரியருக்குக் கட்டணம் வழங்கவேண்டும்.
2. நடனப் பயிற்சியில் சேர்ந்துள்ள மாணவியரின் நடனங்கள் பள்ளி விழாவிலும், பொது விழாவிலும் நடைபெற வாய்ப்பு அளிக்கப்படுவதுடன் பரிசுகளும் முறையாக வழங்கப்படும்.

## ஒழுங்கு

1. பள்ளி மாணவர்கள் அல்லது பெற்றோர்கள், ஆசிரியர்களையோ அல்லது பள்ளி நிர்வாகிகளையோ தரக்குறைவாக பேசினாலோ அல்லது நடந்து கொண்டாலோ பள்ளியிலிருந்து நூக்கப்படுவார்கள்.
2. பெற்றோர்கள் ஒழுங்கு தவறி நடந்தால், மாணவ மாணவியர்களை பள்ளியில் சேர்த்துக்கொள்ளவோ நூக்கவோ இறுதி முடிவு பள்ளி நிர்வாகத்திற்கு உள்ளது.
3. பள்ளியில் பயிலும் நாட்களில் மாணவர்களோ அல்லது பெற்றோர்களோ பள்ளியில் பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்தினால், ஏற்படும் செலவுகளை மாணவ மாணவிகளின் பெற்றோர்களே பொறுப்பேற்க வேண்டும்.

## Consent for Use of Images

1. T.M.K Thiruvalluvar Tamil School to use any still and/or moving image being video footage, photographs and/or frames and/or audio footage depicting my/our children named above, taken by on behalf of the T.M.K. Thiruvalluvar Tamil School on for any of the following uses but not limited to: Advertisements, marketing, leaflets, or any other use such for training, educational or publicity purposes.
2. The above consent will apply throughout the work and be for an indefinite period. Parents may change their consent at any time instructing the school in writing.

**IMPORTANT NOTICE**

It is very important that you **inform the school about any medical condition** which may affect your child's health, safety or education in school **e.g. asthma, epilepsy, diabetes, allergies, eczema** and any hearing and /or vision problems.